*நீங்கள் G1 அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டதையிட்டுப் பாராட்டுக்கள். வாகன சாரதிக்கான வீதிப்பயிற்சி பற்றிச் சிந்திப்பதற்கு இதுவே சரியான தருணம். போக்குவரத்து அமைச்சினால் (MTO) அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பநிலை வாகன சாரதிக் கல்விப் பயிற்சியானது (BDE), G1 வீதிப்பரீட்சைக்கு இன்றியமையாத ஒன்றாக இல்லாதவிடத்தும் சிறந்த வழியாகக் கருதப்படுகின்றது.*

*போக்குவரத்து அமைச்சினால் (MTO) அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பயிற்சி நிலையத்தில், அனுமதி பெற்ற சாரதிப் பயிற்றுனரிடம் ஆரம்பநிலை வாகன சாரதிக் கல்விப் பயிற்சியினைத் (BDE) திறம்படப் பூர்த்தி செய்தால் G1 தரத்துக்கு நீங்கள் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளத் தகுதியுள்ளவராவீர்கள். போக்குவரத்து அமைச்சினால் (MTO) அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தல் காப்புறுதிக் கட்டண வீதங்களில் கழிவுகளைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கும்.*

*அங்கீகரிக்கப்பட்ட தரம் வாய்ந்த வாகனப்பயிற்சி நிலையத்தைத் தெரிவு செய்ய மறந்துவிடாதீர்கள். போக்குவரத்து அமைச்சின் (MTO) அங்கீகாரம் பெறாத பயிற்சி நிலையங்களுக்கு G1 சாரதிகளைப் பயிற்றுவிக்கும் அதிகாரம் இல்லை. G1 சாரதிகளைப் பயிற்றுவிப்பதற்கு, வாகன சாரதிப் பயிற்றுனர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆரம்பநிலை வாகனப்பயிற்சி நிலையத்தில் (BDE) பணியாற்ற வேண்டும். போக்குவரத்து அமைச்சினால் (MTO) அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பநிலை வாகன சாரதிக் கல்விப் பயிற்சி வழங்குபவரைக் கண்டு கொள்ள நீங்கள்:*

1. Ontario.ca/bde *எனும் இணையத்தளத்துக்குச் செல்லவும்*
2. *மின்னஞ்சல்* Driver.Education@ontario.ca
3. *நீங்கள் விரும்பினால் வகுப்பறையிலும் வாகனத்திலும் பயிற்சிகளை வழங்கும் பயிற்றுனர்களைச் சந்திப்பதற்குக் கேட்டுக் கொள்ளலாம்*

*வாகனத்தைச் செலுத்துதல் ஒரு சிறப்புச் சலுகை என்பதனை நினைவிற் கொள்ளவும். வட அமெரிக்காவில், ஒன்றாரியோவின் வீதிகளை அதியுயர் பாதுகாப்பானதாக வைத்திருக்க எமக்கு உதவுங்கள்.*